**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING ENVIRONMENTAL CLEARANCE FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OF M/S. ARANARAI NORTH ROUGH STONE QUARRY, S.F.No.120/2A1A (PART), ARANARAI (NORTH) VILLAGE, PERAMBALUR TALUK, PERAMBALUR DISTRICT OVER AN EXTENT OF 9.00.0 HECTARES ON 19.08.2026 AT 10:30 AM IN M/S. ANBU MAHAL, ATTUR ROAD, PERAMBALUR TALUK, , PERAMBALUR DISTRICT.**

**PRESIDING OFFICERS:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Thiru. S. Sornaraj | : | Personal Assistant to the District Collector (General)/Deputy Collector,<br>Perambalur District. |
| 2. | Dr.D.Sugumar | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Perambalur District. |
| **PROPRIETOR:** | | | |
| 3. | Proprietor – Tamil Nadu Minerals Limited | | **Project :**<br>M/s. Aranarai North Rough Stone Quarry,<br>S.F.No.120/2A1A (Part),<br>Aranarai (North) Village,<br>Perambalur Taluk,<br>Perambalur District. |

The total number of people who attended the meeting, including the Proprietor of the quarry, Government Officials, Environmental Activists and the General Public, was 57. (copy of the attendance register is attached herewith).

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur** said, Good morning everyone, On behalf of the Tamil Nadu Pollution Control Board and the Perambalur District Administration, I would like to welcome the Personal Assistant to the District Collector (General)/Deputy Collector, other government officials, the public, volunteers, police officers, press and media friends who have come to preside over and conduct the public hearing meeting for the rough stone quarry of M/s. Aranarai North Rough Stone Quarry, S.F.No.120/2A1A (Part), Aranarai (North) Village, Perambalur Taluk, Perambalur District over an extent of 9.00.0 Hectares.

The proposed quarry covering a total area of 9.00.0 hectares. This public hearing meeting is being conducted as part of the process for obtaining Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA) for the proposed quarry project. A public notice regarding today's meeting was published 30 days in advance in" The New Indian Express" English newspaper and Thinathanthi" Tamil newspaper, dated 17.07.2026.

Furthermore, the public hearing meeting has already been advertised through pamphlets and loudspeakers to inform the public living in Aranarai North and surrounding villages. The Project Environmental Consultant will explain the proposed project in detail. After that, the public can register their comments one by one by stating their name and address. All the comments of the public so recorded will be recorded in audio and video format and sent to the State Environmental Impact Assessment Authority. Now the Environmental Consultant will explain the project explanation. Thank you.

**Thiru. E. Ganesan, Manager, Mining Leasing Division, Tamil Nadu Minerals Limited:** explained the project to the public through a Power Point Presentation.

**Personal Assistant to the District Collector (General) /Deputy Collector** requested that those who wish to express their views first provide their name and locality details and then register their views.

1. **Thiru.Muthamizh Selvan, Perambalur District, BJP District President**

A year ago, the previous government came and auctioned the quarry in certain areas, specifically in Kalpadi North and Padalur. While the operation period of the quarry was delayed and kept on hold, you have now come forward stating that the quarry is going to become operational and have sought public feedback. Over the past few weeks, you have conducted public hearings for only four quarries. Four days before conducting this hearing, you went to all areas including Kaulpalayam, Perali, and Perambalur, met the people, and announced that you were going to open such a quarry. You had advertised everywhere saying, "Tell us whatever objections you have." On what basis are you doing this now? That is to say, if the government itself is going to acquire and run 9 hectares, which means 22 acres of land, on what basis are you doing this? This is the first question. Secondly, on which day did you publish the advertisement? In the morning, I did not even know who the concerned official was. When I asked him, he claimed that they had advertised 50 days ago. You say, "We obtained permission on July 2nd." From whom did you get permission? Where did you advertise? In which newspaper was the advertisement published? Setting up a stone

come on behalf of the government. This stone quarry to be taken up by the government is certainly a good thing. However, just as the people are saying, the point I want to put forward as my opinion is that you must provide employment opportunities to the people. Give them priority. A lot of things have been mentioned regarding this. It has been stated that when our government takes over, ten percent will be allocated to provide employment, educational facilities, road facilities, drinking water facilities, and livestock rearing (goats and cattle) for the people living in the villages surrounding that area. Keeping in mind the grievances raised by our people, and as stated by our government, I request as my opinion that this stone quarry be operated while providing employment opportunities to them. Thank you, greetings.

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur** said, the members of the public who wish to express their opinions can come forward and register them. You may share your views. The session runs from 10:30 AM to 12:00 PM. Therefore, those who are waiting to speak, please come forward and state your opinions.

The public hearing is going to conclude at 12:00 PM. He then thanked everyone who attended the meeting held today from 10:30 AM to 12:00 PM—both those who shared their opinions and those who left without speaking—and announced that the public hearing stood concluded.

**Enclosures :**

1. Copy of attendance register of Public hearing (05 pages - 57 members)
2. Project summary Presentation
3. Copy of petitions received during Public hearing- 05 Nos.
4. Video recording of public hearing CD

22/9/26

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Perambalur**

**Personal Assistant to Collector**
**(General)/Deputy Collector,**
**Perambalur**

(3/3)

quarry is not a problem unique to the Alambadi area alone. The entire Perambalur town will be affected by pollution. The government itself is going to take over and run a stone quarry. The government already runs TASMAC (liquor outlets). If the government is going to do everything, how can this be right? The government will just issue a single order and leave. Who is actually going to come and run the quarry there? Are you officials going to come there and break the stones? Are you going to do those difficult jobs? You will hand it over to a large private company. The employees of that company will work as drivers. They will do everything. The local people living here will not get employment opportunities. This is the first issue. Secondly, if you set up a quarry there and fully fence it all around, who is responsible for the goat herders who depend on that area for their livelihood? Who is responsible for the sister who goes there to cut thorny bushes? Who is responsible for the livelihood of the sisters who go to gather firewood? How will their livelihood remain unaffected? The hill located in Alambadi is a common grazing pasture (Mandaiveli). Without any connection and without any conscience, you come and say that you are going to set up such a massive quarry. If the government itself is now going to plunder all the mineral resources, how can this be accepted? When we asked the village people, they said, "We do not know anything about this." You claim that you have advertised to the public. How can we accept this? Why are you taking over this quarry? Tell us. Are you taking over the quarry for government works? Or are you going to sell the stones? If you are going to sell them, who is going to detonate explosives and break the stones in the quarry? Who will operate the heavy machinery? Who will drive the lorries? To whom are you going to sell? You have already made a decision. You are creating a situation where no one here should question anything. This act is akin to government terrorism. We cannot allow this. Democratically, we will convene an all-party meeting and stage protests against this in Perambalur. Furthermore, we will go to court and fight this legally. Therefore, this public hearing must be cancelled immediately. For it to be called a public hearing, at least two hundred or three hundred members of the general public should participate. But there are not even twenty people here. Will you claim that you came and explained things, wrap up the meeting as a mere formality, show somewhere that you gathered feedback, attach the letter, send it, and obtain permission? Do you think the government can do whatever it pleases? I strongly condemn this. This meeting must be postponed. It must be postponed. It must be postponed. Thank you.

**2. Tmt. Jebakani, Social Activist**

I extend my foremost greetings to everyone who has attended this public hearing. I also extend my greetings to the District Collector and the Environmental Engineer who have

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், அரனாரை வடக்கு கிராமம், தி/ள். அரனாரை வடக்கு சாதாரணக் கல் குவாரி, புல எண். 120/2A1A (பகுதி), மொத்த பரப்பளவு 9.00.0 ஹெக்டேரில் அமையவுள்ள சாதாரணக் கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், ஆத்தூர் சாலையில் அமைந்துள்ள தி/ள். அன்பு மஹாலில் 19.08.2026 அன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை அதிகாரிகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.சொர்ணராஜ் | : | மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது)/துணை ஆட்சியர் பெரம்பலூர் மாவட்டம். |
| 2. | முனைவர்.த.சுகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர். |
| **நிறுவனத்தினர்** | | | |
| 3. | உரிமையாளர் - தமிழ்நாடு கனிம நிறுவனம் | : | **திட்டம்** :<br>தி/ள். அரனாரை வடக்கு சாதாரணக் கல் குவாரி,<br>புல எண். 120/2A1A (பகுதி),<br>அரனாரை வடக்கு கிராமம்,<br>பெரம்பலூர் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம். |

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், அரசு அலுவலர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களின் மொத்த எண்ணிக்கை – 57 ஆகும். (வருகைப் பதிவேட்டின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** அவர்கள், அனைவருக்கும் இனிய காலை வணக்கம், பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், அரனாரை வடக்கு கிராமத்தில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தி/ள். அரனாரை வடக்கு சாதாரணக் கல் குவாரி, புல எண். 120/2A1A (பகுதி), மொத்த பரப்பளவு 9.00.0 ஹெக்டேர்-ல் அமையவுள்ள சாதாரணக் கல் குவாரிக்கான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தித்தர வருகைபுரிந்துள்ள பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் மற்றும் துணை ஆட்சியர் அவர்களையும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகளையும், பொதுமக்களையும், தன்னார்வளர்களையும், காவல்

துறை அதிகாரிகள், பத்திரிக்கை மற்றும் ஊடகத்துறை நண்பர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும், பெரம்பலூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும் வருக வருக என்று வரவேற்கிறேன்.

முன்மொழியப்பட்ட இக்குவாரி 9.00.0 ஹெக்டேர் பரப்பளவில் இருப்பதால் இந்த கல்குவாரி அமைப்பதற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க ஆணையத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெரும் பொருட்டு இக்கூட்டமானது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, இன்று நடைபெற்று கொண்டிருக்கும் கூட்டம் குறித்து 17.07.2026 தேயிட்ட"தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் மற்றும் தினத்தந்தி தமிழ்" செய்தித்தாள் ஆகியவற்றில் 30 நாட்களுக்கு முன்னதாகவே பத்திரிக்கை செய்தி வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் குறித்து அரனாரை வடக்கு மற்றும் சுற்றுவட்டார கிராமத்தில் வசிக்கும் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் துண்டு பிரசுரங்கள் மற்றும் ஒலிப்பெருக்கி மூலம் ஏற்கனவே விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட இத்திட்டம் குறித்து திட்ட சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்கள் விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொது மக்கள் ஒவ்வொருவராக தங்களுடைய பெயர் மற்றும் முகவரியை தெரிவித்துவிட்டு தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம். அவ்வாறு பதிவு செய்யப்படும் பொதுமக்களின் கருத்துக்கள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்படும். தற்போது சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்கள் திட்ட விளக்கம் குறித்து எடுத்துரைப்பார்கள். நன்றி.

**திரு.E.கணேசன், மேலாளர், சுரங்க குத்தகைப்பிரிவு, தமிழ்நாடு கனிம நிறுவனம்** அவர்கள்: திட்டம் குறித்த விளக்கங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விளக்கினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது)/துணை ஆட்சியர்** அவர்கள், கருத்துக்களை கூற வருபவர்கள் தங்களுடைய பெயர், ஊர் பற்றிய விவரங்களை முதலில் தெரிவித்துவிட்டு பின்னர் கருத்துக்களை பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

1. **திரு.முத்தமிழ் செல்வன், பெரம்பலூர் மாவட்டம். BJPமாவட்டத் தலைவர்**

ஒரு வருடத்திற்கு முன்பு, முந்தைய அரசு வந்து சில பகுதிகளில், குறிப்பாக கல்பாடி வடக்கு, பாடலூர் பகுதிகளில் குவாரியை ஏலம் விட்டது. குவாரி வந்து செயல்படுவதற்கான காலத்தை தாமதப்படுத்தி வைத்திருந்த நிலையில், தற்போது நீங்கள் வந்து குவாரி செயல்படப் போகிறது என்று கூறி, மக்களுடைய கருத்துகளைக் கேட்டிருக்கிறீர்கள். கடந்த சில

வாரங்களாக நான்கு குவாரிகளுக்காக மட்டுமே கருத்துக் கேட்பு நடத்தி இருக்கிறீர்கள். அந்தக் கருத்துக் கேட்பு நடத்துவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு, கவுல்பாளையம், பேரளி, பெரம்பலூர் உள்ளிட்ட அனைத்து பகுதிகளுக்கும் சென்று மக்களைச் சந்தித்து, இதுபோன்ற குவாரியைத் திறக்கப் போகிறோம் என்று கூறியிருந்தீர்கள். "உங்களுக்கு என்ன ஆட்சேபனை இருக்கிறதோ சொல்லுங்கள்" என்று எல்லா இடங்களிலும் விளம்பரம் செய்திருந்தீர்கள். இப்போது எந்த அடிப்படையில் இதைச் செய்கிறீர்கள்? அதாவது, 9 ஹெக்டேர் அதாவது 22 ஏக்கர் நிலத்தை அரசாங்கமே எடுத்துக்கொண்டு நடத்தப் போகிறது என்றால், எந்த அடிப்படையில் இதைச் செய்கிறீர்கள்? முதலாவது கேள்வி இதுதான்.

இரண்டாவதாக, நீங்கள் என்றைக்கு விளம்பரம் கொடுத்தீர்கள்? காலையில் சம்பந்தப்பட்ட அதிகாரி யார் என்பதே எனக்குத் தெரியவில்லை. அவரிடம் கேட்டபொழுது 50 நாட்களுக்கு முன்பாகவே விளம்பரம் செய்துவிட்டோம் என்று கூறினார். ஜுலை 2-ல் அனுமதி பெற்றுவிட்டோம்" என்று கூறுகிறீர்கள். யாரிடம் அனுமதி வாங்குனீர்கள்? எங்கே விளம்பரம் செய்தீர்கள்? எந்த பத்திரிகையில் விளம்பரம் வெளியிட்டீர்கள்?

கல் குவாரி அமைப்பது ஆலம்பாடி பகுதிக்கு மட்டும் பிரச்சினை அல்ல. ஒட்டுமொத்த பெரம்பலூர் நகரமே மாசுபாட்டால் பாதிக்கப்படும். அரசாங்கமே ஒரு கல் குவாரியை எடுத்துக்கொண்டு நடத்தப் போகிறது. அரசாங்கமே டாஸ்மாக் நடத்துகிறது. எல்லாவற்றையும் அரசாங்கமே செய்யப் போகிறது என்றால் இது எப்படி சரியாக இருக்கும்?

அரசாங்கம் ஒரே ஒரு உத்தரவு மூலம் சொல்லிவிட்டு சென்றுவிடுவீர்கள். அங்கே யார் வந்து குவாரியை நடத்தப் போகிறார்கள்? நீங்கள் அதிகாரிகள் அங்கே வந்து கல்லை உடைக்கப் போகிறீர்களா? அந்தக் கடினமான வேலைகளை நீங்கள் செய்யப் போகிறீர்களா?

நீங்கள் ஒரு பெரிய நிறுவனத்திடம் ஒப்படைத்துவிடுவீர்கள். அந்த நிறுவனத்தின் ஊழியர்கள்தான் டிரைவராக இருப்பார்கள். அவர்கள்தான் எல்லாவற்றையும் செய்வார்கள். இங்கு இருக்கிற மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காது. இது முதலாவது பிரச்சினை.

இரண்டாவதாக, அங்கே குவாரியை அமைத்து, அதைச் சுற்றிலும் முழுமையாக வேலி அமைத்துவிட்டால், அந்தப் பகுதியை நம்பி வாழும் ஆடு மேய்ப்பவர்களுக்கு யார் பொறுப்பு? அங்கே சென்று முள் வெட்டிக் கொண்டு வரும் தங்கைக்கு யார் பொறுப்பு? விறகு பொறுக்கச் செல்லும் சகோதரிகளின் வாழ்வாதாரத்திற்கு யார் பொறுப்பு? அவர்களின் வாழ்வாதாரம் எப்படி பாதிக்கப்படாமல் இருக்கும்?

ஆலம்பாடியில் அமைந்திருக்கும் மலை ஒரு மந்தைவெளிப் பகுதி. எந்தவித தொடர்பும் இல்லாமல், எந்தவிதமான மனசாட்சியும் இல்லாமல், வந்து இவ்வளவு பெரிய குவாரியை அமைக்கப்போகிறோம் என்று கூறுகிறீர்கள். இப்போது அரசாங்கமே அனைத்து கனிம வளங்களையும் கொள்ளையடிக்கப் போகிறது என்றால் இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

கிராம மக்களிடம் கேட்டப்பொழுது. "எங்களுக்கு எதுவுமே தெரியாது" என்று அவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் மக்களிடம் விளம்பரம் செய்துவிட்டோம் என்று கூறுகிறீர்கள். எப்படி இதை எடுத்துக்கொள்ள முடியும்? எதற்காக இந்தக் குவாரியை எடுக்கிறீர்கள்? சொல்லுங்கள். அரசாங்கப் பணிகளுக்காக குவாரியை எடுக்கிறீர்களா? அல்லது கற்களை விற்பனை செய்யப் போகிறீர்களா? விற்பனை செய்யப் போகிறீர்கள் என்றால், குவாரியில் வெடிவைத்து கற்களை உடைப்பது யார்? கனரக வாகனத்தை இயக்குவது யார்? லாரியை ஓட்டுவது யார்? யாரிடம் விற்பனை செய்யப் போகிறீர்கள்? எந்த விபரமும் சொல்லாமல், நீங்கள் ஒரு முடிவை எடுத்துவிட்டீர்கள். இங்கே யாரும் எதுவும் கேட்கக்கூடாது என்ற நிலையை உருவாக்குகிறீர்கள். இது அரசு பயங்கரவாதம் போன்ற செயலாகும். இதை நாங்கள் அனுமதிக்க முடியாது. ஜனநாயக முறையில், அனைத்து கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி, பெரம்பலூரில் இதற்கு எதிராக போராட்டம் நடத்துவோம். மேலும், நீதிமன்றத்திற்கும் சென்று சட்டரீதியாகப் போராடுவோம்.

எனவே, இந்தக் கருத்துக் கேட்பு கூட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். ஒரு பொதுமக்கள் கருத்துக் கேட்பு என்றால் குறைந்தபட்சம் இருநூறு, முன்னூறு பொதுமக்களாவது கலந்து கொள்ள வேண்டும். ஆனால் இங்கே இருபது பேர் கூட இல்லை. நாங்கள் வந்து விளக்குகிறோம் என்று கூறிவிட்டு, ஒரு சம்பிரதாயத்திற்காக கூட்டத்தை முடித்து, எங்கோ கருத்துகளைப் பெற்றதாகக் காட்டி, கடிதத்தை இணைத்து அனுப்பிவிட்டு, அனுமதி பெறுவீர்கள் என்றால், அரசாங்கம் நினைத்ததை எல்லாம் செய்யலாம் என்று நினைக்கிறீர்களா? இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்தக் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டும். ஒத்திவைக்க வேண்டும். ஒத்திவைக்க வேண்டும். நன்றி.

2. **திருமதி. ஜெபக்கனி, சமூக ஆர்வலர்**

இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் எனது முதல் வணக்கத்தை தெரியப்படுத்திக் கொள்கிறேன். மேலும் அரசு சார்பாக வந்துள்ள மாவட்ட ஆட்சியருக்கும் மற்றும் சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் எனது வணக்கத்தை தெரியப்படுத்திக் கொண்டு இந்த அரசு அரசால் எடுக்கக்கூடிய இந்த கல்குவாரி கண்டிப்பாக ஒரு நல்ல விஷயம்தான். ஆனால் மக்கள் கூறுவது போல என்னுடைய கருத்தை நான் முன்வைக்கிறது என்னவென்றால் மக்களுக்கு நீங்கள் வேலை வாய்ப்பை கொடுங்கள். அவர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். அவர்களுக்கு வந்து நிறைய நம்ம இதிலே வந்து சொல்லியிருக்குது. இந்த நிறுவனமானது நமது அரசாங்கம் எடுக்கும்போது ஒரு பத்து சதவீதம் வந்து ஒதுக்கப்பட்டு அங்கு இருக்கக்கூடிய மக்கள் அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு, கல்வி வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி, ஆடு மாடு வளர்த்தல் இந்த மாதிரி நிறைய அடிப்படை வசதிகளை மக்களுக்கு செய்து கொடுக்கும்படி சொல்லியிருக்கு. நம்ம அரசாங்கம் கூறியதுபோல நம்ம மக்களுக்கு அவங்க சொன்னக் குறைகளை மனதில் வைத்துக்

கொண்டு அவர்களுக்கும் வேலை வாய்ப்பை கொடுத்து இந்தக் கல்குவாரியை நடத்தும்படி என்னுடைய கருத்தாக கோரிக்கொண்டு விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** அவர்கள், பொதுமக்கள் கருத்துக்கள் கூற விரும்பினால் முன் வந்து தங்களது கருத்துக்களை பதிவு செய்யலாம்.

கருத்துக்களை கூறலாம். 10.30 யிலிருந்து 12 மணிவரை இருக்கிறது. ஏனவே கருத்துக்களை கூற இருப்பவர்கள் கருத்துக்களை முன்னே வந்து கூறுங்கள்.12 மணிக்கு கருத்து கேட்புக்கூட்டம் முடிவடைய போகிறது.

இன்று 10.30 யிலிருந்து 12 மணிவரை நடைபெற்ற கூட்டத்தில் கருத்துக்களை கூறியும் கருத்துக்களை கூறாமலும் சென்றவர்களுக்கு நன்றி கூறி இத்துடன் இந்த கருத்து கேட்புக் கூட்டம் முடிவடைகிறது என்றுக் கூறினார்.

**இணைப்பு :**

1. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டோரின் பெயர் பட்டியல் (05 பக்கங்கள்: 57 நபர்கள்)
2. திட்ட உரை விளக்கக்காட்சி.
3. பொது மக்களின் கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் - 05 எண்கள்.
4. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட ஒளிப்பதிவு குறும்பதிவி.

22/9/26

மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
பெரம்பலூர்

22.9.26

மாவட்ட ஆட்சியர் நேர்முக
உதவியாளர் (பொது)/துணை ஆட்சியர்,
பெரம்பலூர் மாவட்டம்.

(2/3)